# ஹிந்தி எதிர்ப்புக் காரியக் கமிட்டி.

## சென்னையில் கூட்டம்

## ஈழத்து சிவானந்த அடிகள் 2-வது சர்வாதிகாரி.

### காரியக்கமிட்டியார் முடிவு.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூன் 5.

இன்று காலை எட்டு மணிக்கு ஹிந்தி எதிர்ப்புக் காரியக் கமிட்டிக் கூட்டம் கூடிற்று.

தோழர்கள் சௌந்திரபாண்டியன், கே. ஏ. பி விசுவநாதம், ஈ. வெ. ராமசாமி, கே. எம். பால சுப்பிரமணியம் ஆகிய காரியக் கமிட்டி மெம்பர்கள் பிரசன்னமாயிருந்தார்கள்.

தோழர் சௌந்தரபாண்டியன் தலைமைவகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்.

1. சட்ட வரம்புக்குட்பட்டு சமாதானமாக நடந்துவருகிற கட்டாய ஹிந்தி எதிர்ப்புப் பிரசாரத்தை அடக்குமுறைகளைக் கொண்டு அடக்க முயற்சித்தும் பிரஜா உரிமைகளை மறுத்தும் வருகிற சென்னை சர்க்கார் செயலை இக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

2. சென்னை கட்டாய ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியின் சர்வாதிகாரியாகிய தோழர் செ. தெ. நாயகம் அவர்களை சென்னை சர்க்கார் கைது செய்தபோது கமிட்டியின் விருப்பத்திற்கிணங்கி சர்க்கார் மனப்பான்மையை முடிவாகத் தெரிந்துகொள்வதற்காக கேஸ் முடிவாகும்வரை தற்காலிகமாக ஹிந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் தீவிரமாகக் கலந்துகொள்வதில்லையென்று தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் வாக்குக் கொடுத்திருப்பதை முன்னிட்டு அவருடைய ஸ்தானத்தில் ஈழத்துச் சிவானந்த அடிகளை இரண்டாவது சர்வாதிகாரியாக இக் கமிட்டி நியமித்திருக்கிறது.

3 கமிட்டி மெம்பர்கள் தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்ட பிறகு மீண்டும் கமிட்டிக் கூட்டம் 16-6-38ல் சென்னையில் கூடும்.